# அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்

## தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்

சுற்றறிக்கை - 1

நாள்: 06.06.2024

ஏப்ரல் 2024இல் நடைபெற்ற U.G. & P.G. பருவத்தேர்வு முடிவுகள் **06.06.2024** அன்று வெளியிடப்பட்டன. தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணாக்கர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாணாக்கர்கள் தேர்வு முடிவுகளைத் தத்தம் துறைகளிலும், கல்லூரியின் இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

கல்லூரியின் இணையதள முகவரி: **www.gacakum.ac.in**

மேற்படி இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்கள் மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பிக்கலாம் எனவும், உரிய விண்ணப்பப் படிவங்களை **10.06.2024** முதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கலாகிறது.

மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.400/- செலுத்தி விடைத்தாள் நகல் (Xerox Copy) பெற்ற பின்னரே மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனைத் தாள்களுக்கு வேண்டுமானாலும் மறுமதிப்பீடு கோரலாம். இதற்கான கட்டணம் இளநிலை மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.500/-ம் முதுநிலை மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.600/-ம் தனியாகச் செலுத்த வேண்டும்.

தேர்ச்சி பெறாத இறுதியாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் மட்டும் உடனடித் தேர்வுகளுக்கு (Instant Examinations) விண்ணப்பிக்கலாம். ஒருவர் அதிகபட்சம் நான்கு தாள்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதற்கான தேர்வுக் கட்டணம் இளநிலை மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.750/-(ரூபாய் எழுநூற்று ஐம்பது), முதுநிலை மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.1000/-(ரூபாய் ஆயிரம்) மற்றும் விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- (ரூபாய் ஐம்பது). சேர்த்துச் செலுத்த வேண்டும்.

மேற்படி தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க விழையும் மாணாக்கர்கள் **15.06.2024** தேதிக்குள் துறைத்தலைவர் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கலாகிறது.

**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**

தேர்வுக் கட்டுபாட்டு அலுவலர்
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612 001

**முதல்வர்**

முதல்வர்
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612 001

நகல்: அனைத்துத் துறைத்தலைவர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்.
தகவல் பலகைகள், கல்லூரி நூலகம்.